பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

பெங்களூர் சம்பியன்



விரிவு பக்கம்:-09

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 | கதிர் : 189
புதன்கிழமை 04 ஜூன் 2025
வைகாசி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

# போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூர்வது அவசியம்!

## அவுஸ்திரேலியத் தூதுவர் ஸ்டீபன்ஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 4

போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்வதற்கான அவசியத்தை நாம் உணர்ந்து கொள்கிறோம். ஆனால் அவுஸ்திரேலியாவில் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவுத்தூபி அமைக்கப்படுவது குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்கும் - இவ்வாறு இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

☞ 15



செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில்

# இரண்டரையடி நீளமான என்புத்தொகுதிகள் மீட்பு

## சிறுவர்களுடையவை எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில், இரண்டரையடி நீளமான என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. அவை சிறுவர்களுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

☞ 15

## சித்துப்பாத்தி குற்றப்பகுதியை புதைகுழியாக அறிவிக்குக!

### யாழ். நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம்
### ஜூன் மாதம் 6ஆம் திகதியில் கட்டளை

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வுப்பணிகள்

☞ 15

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள ஊழல்வாதிகள் கைதாவார்கள்

## அமைச்சர் நளிந்த உறுதி




கொழும்பு, ஜூன் 4

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் கள்வர்கள் எவரும் தப்பமுடியாது. வெளிநாடுகளில் பதுங்கியுள்ள ஊழல்வாதிகளையும் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

☞ 15

## கிளிநொச்சியில் குடு; தாயும் மகனும் கைது

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டிப் பகுதியில் 23 கிராம் 75 மில்லிக்கிராம் குடு போதைப் பொருளை

☞ 15

ஊர்காவற்றுறையில்

## ஆலயங்களில் திருடிய சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஏழு ஆலயங்களில் தொடர்ச்சியாகத் திருட்டுகளில் ஈடுபட்ட சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 20 வயதுடையவர். அவர் ஊர்காவற்றுறை

☞ 15

சின்னப்பூவரசன்குளம் காட்டுப்பகுதியில் பயங்கரம்

# மனைவி கழுத்தறுத்துக் கொலை 'தலை'யுடன் கணவன் சரண்!

வவுனியாவில் கொடூரம்

☞ 15



## போதைமாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஏழாலையில் 50 போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய

☞ 15

'கடவுளிட்டையே களவெடுக்கிற கல்நெஞ்சுக்காரர் பிடிபடாமல் இருப்பினமோ?'

## முல்லையில் இவ்வருடம் மட்டும் 17 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

### நீச்சல் பயிற்சியைக் கட்டாயமாக்குக
### துரைராசா ரவிகரன் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 17 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

☞ 15

கிருசாந்தி கொலை வழக்கு;

# குற்றவாளிகளுடைய அடிப்படை உரிமைமீறல் மனு உயர்நீதிமன்ற நீதிபதிகளால் அடியோடு நிராகரிப்பு

## மேன்முறையீடு செய்வதற்கும் அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 4

குமாரசுவாமி கிருசாந்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றவாளிகள் ஐந்து பேரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவால் திட்டவட்ட

☞ 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4091 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 18 38 45 75 |
| விசேட எழுத்து | S |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1158 |
| வெற்றி இலக்கினம் | [illegible] |
| வெற்றி இலக்கங்கள் | 06 27 51 54 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0117 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 1 4 6 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2197 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 08 45 54 55 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5849 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 8 6 1 0 8 2 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1879 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 42 51 63 75 |
| விசேட எழுத்து | O |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0424 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 8 2 |

# ஒரு இலட்சம் இலங்கையருக்கு மாலைதீவில் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜூன் 4

**மாலைதீவில் இலங்கையர்களுக்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகள் உள்ளன என்றும் தற்போது 30,000 இலங்கையர்கள் மாலைதீவில் பல்வேறு வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாட் தெரிவித்துள்ளார்.**

வெளியுறவு அமைச்சகத்தில் கடந்த திங்கட்கிழமை மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாட் மற்றும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு இடம்பெற்றபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மாலைதீவில் பணிபுரியும் இலங்கையர்கள் இலங்கைக்கு பணம் அனுப்புவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் விஜித ஹேரத்தின் கேள்விக்கு பதிலளித்த மசூத் இமாட், மாலைதீவு அரசாங்கமும் இந்த பிரச்சினையில் கவனம் செலுத்தியுள்ளது. பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்கனவே ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| வெற்றி வாரம் | 0557 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 4 1 8 6 2 1 |

**Super Ball** DLB

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2823 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 15 39 41 45 |

**சனிதா** DLB

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 14 15 18 79 |
| வெற்றி வாரம் | 4984 |

**SASIRI** DLB

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| வெற்றி வாரம் | 0696 |
| வெற்றி இலக்கம் | 15 20 35 |

**லக்ன ராசி** DLB

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| மிதுனம் | |
| வெற்றி இலக்கம் | 08 27 41 48 |
| சீட்டிழுப்பு வாரம் | 4535 |

**KAPRUKA** DLB

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 37 |
| வெற்றி இலக்கம் | 01 12 40 62 |
| வெற்றி வாரம் | 1999 |

**அத கோடிபதி** DLB

| | |
|---|---|
| திகதி | 03.06.2025 |
| தினம் | செவ்வாய்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 42 51 53 54 |
| வெற்றி வாரம் | 2649 |

## சுற்றுலாத்துறை சாதனை

கொழும்பு. ஜூன் 4

மே மாதத்தில் மாத்திரம் 132,919 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் பதிவான 129,466 என்ற முந்தைய சாதனையையும் முறியடித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பிரதமர் பதவியில் மாற்றமில்லை!

கொழும்பு. ஜூன் 4

பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்துக்குள் எவ்வித யோசனையும் முன்வைக்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மறுசீரமைக்கப்படவுள்ளது எனவும், புதிய பிரதமராக பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி தகவலில் எவ்வித உண்மையும் இல்லை. அமைச்சரவை மாற்றம் மற்றும் பிரதமர் பதவியில் மாற்றம் என்பன தொடர்பில் அரசாங்கத்துக்குள் கலந்துரையாடப்படவில்லை. இது திட்டமிட்ட அடிப்படையில் அரசியல் எதிரிகளால் பரப்பப்படும் தகவலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



## கிளிநொச்சியில் கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதநகர் பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஒரு தொகை கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபரின் கீழ் உருவாக்கப்பட்ட சிறப்புப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையில் அவை மீட்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (ச- 113)

# அநுர அரசாங்கம் கவிழ்ந்தால் பொறுப்பேற்க சஜித் தயாராம்

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

தற்போதைய அரசாங்கம் பொருளாதார ரீதியில் கவிழுமாக இருந்தால் அதைப் பாரமேற்று நடத்துவதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்று முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அவசரப்படாது. எப்படியும் இந்த வருடம் தேர்தல் இடம்பெறும் என நம்பவில்லை. விடவும் முடியாது. தேர்தலை நடத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும். அதனால் நடத்தியே ஆகவேண்டும்.

அரசாங்கம் இன்னும் எதிர்க்கட்சி மனோநிலையில் இருந்து விடுபடவில்லை. அவர்கள் எதிர்க்கட்சி போலவே நடந்துகொள்கிறார்கள். அவர்கள் அதற்குத்தான் தகுதியானவர்கள் என்று நிரூபித்துக்கொண்டு வருகிறார்கள். எம்மிடம் சிறந்த பொருளாதாரத் திட்டம் உள்ளது. கடந்த தேர்தலில் அந்தத் திட்டத்தை வெளிப்படுத்தியிருந்தோம். அதுவொரு சிறந்த பொருளாதாரத் திட்டம். வெளிநாட்டு கடன்களை அடைப்பதற்கு என்ன செய்ய வேண்டும். உள்ளூர் உற்பத்திகளை முன்னேற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் போன்ற யோசனைகள் அதில் உள்ளன என்றார். (எ-75)

## யாழில் சில பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் சிலவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பில் யாழ் மாவட்ட பாவனையாளர்கள் அதிகாரசபையால் தகவல் தரப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக கேட்கப்பட்டதற்கமைவாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அதிகாரசபையின் இணைப்பதிகாரியால் இந்தத் தகவல் வழங்கப்பட்டது.

அதன்படி கீரிச்சம்பா 260 ரூபா, சம்பா அரிசி 240 ரூபா, வெள்ளை பச்சை/சிவப்பு பச்சை அரிசி 220 ரூபா, இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை பச்சை 210 ரூபா, வெள்ளை நாடு - சிவப்பு நாடு 230 ரூபா, 500 மில்லிலீற்றர் தண்ணீர்ப் போத்தல் 70 ரூபா, ஆயிரம் மில்லி லீற்றர் தண்ணீர்ப் போத்தல் 100 ரூபா, 1500 மில்லி லீற்றர் தண்ணீர்ப் போத்தல் 130 ரூபா, 2000 மில்லி லீற்றர் தண்ணீர்ப் போத்தல் 160 ரூபா, 5000 மில்லி லீற்றர் தண்ணீர்ப் போத்தல் 350 ரூபா எனத் தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகரசபையை விட்டுத்தரமாட்டோம்



## பிமல் ரத்நாயக்க உறுதி

யாழ்ப்பாணம் மே 29

**கொழும்பு மாநகரசபையின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு சஜித் அணியினருக்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றினால் நாட்டின் முழு அதிகாரமும் தங்கள்வசம் வரும் என்ற எண்ணத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி சிறு பிள்ளைத்தனமாகச் செயற்படுகின்றது.

கொழும்பு மாநகரசபையில், அதிக ஆசனங்களைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியே ஆட்சி அமைக்கும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இதற்காக பலசுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எந்தவொரு கட்சியும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால், ஏனைய சிறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் மும்முரமாக கலந்துரையாடல்களை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பகிடிவதையால் ஆற்றில் குதித்த மாணவி

கொழும்பு, ஜூன் 4

குருநாகலில் உள்ள குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்கும் மாணவி ஒருவர் பகிடிவதை காரணமாக உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற சம்பவம் தொடர்பில் நான்கு மாணவர்கள் குளியாப்பிட்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்லூரிக்கு அருகில் உள்ள வாவியில் குதித்துள்ளார். பின்னர் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து மாணவியைக் காப்பாற்றினர்.

இந்த மாணவி, கல்லூரியில் இடம்பெறும் பகிடிவதை காரணமாக தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று வாவியில் குதித்துள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபர்களான நான்கு மாணவர்களைக் கைதுசெய்துள்ளனர். (ச-இ)

# சீரற்ற காலநிலையால் 11,469 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 4

நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக 3,064 குடும்பங்களைச் சேர்ந்த 11,469 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக 13 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)





# பொன்னாலை கடலுக்குள் பாய்ந்தது ஹைஏஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

பொன்னாலை பாலத்தடியில் நேற்று அதிகாலை ஹைஏஸ் வாகனமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரைநகரில் இருந்து மிருசுவில் நோக்கிப் பயணித்த குறித்த வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலத்திலிருந்து கடலுக்குள் பாய்ந்துள்ளது. வாகனத்தில் சாரதி மாத்திரம் இருந்தபோதிலும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-27,66)

# மின்சார சட்டவரைவை எதிர்த்து மனுத்தாக்கல்

கொழும்பு, ஜூன் 4

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரச் சட்டமூலத்திலுள்ள சில பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று தீர்ப்பளிக்கக்கோரி இலங்கை மின்சாரசபை பொறியியலாளர்கள் சங்கம் தாக்கல் செய்த மனுவை நாளைமறுதினம் 6 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டமூலம் இலங்கை மின்சாரசபையை தனியார்மயமாக்க முன்மொழிகிறது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தொடர்புடைய சட்டமூலம் நிறைவேற்றப்படவேண்டுமானால், அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் சர்வசன வாக்கெடுப்பு மூலமும் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று தீர்ப்பளிக்கவேண்டும் என்றும் மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது. (ச-இ)

# அம்புலன்ஸ் சாரதிகள் யாழில் பற்றாக்குறை!

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாவட்டத்தில் அம்புலன்ஸ் சாரதிகளின் பணியிடங்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடமையாற்றிய ஐந்து அம்புலன்ஸ் சாரதிகள் ஓய்வுபெற்றுள்ளனர். அதேவேளை மேலும் ஐவர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். இந்தநிலையில் 10 சாரதிகளுக்கான பணிநிலை வெற்றிடம் காணப்படுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு தற்பொழுது ஓய்வுநிலையில் உள்ளவர்களை மீள வேலைக்கு அழைப்பது தொடர்பில் நாம் சிந்தித்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

# வாயுத்துப்பாக்கிகளை திருத்தித்தாருங்கள்!

யாழ்ப்பாணம். ஜூன் 4

குரங்குகளைக் கட்டுப்படுத்த வழங்கப்பட்ட வாயுத்துப்பாக்கிகள் பழுதடைந்த நிலையில் அவற்றைத் திருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு சாவகச்சேரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ்.மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. கடந்தகாலங்களில் வழங்கப்பட்ட 7 துப்பாக்கிகள்வரை பழுதடைந்துள்ளன .

இதனால் எம்மால் குரங்குகளைக் கட்டுபடுத்தமுடியாது உள்ளது. வாயுத்துப்பாக்கிகளைத் திருத்த வவுனியாவுக்குக்கே செல்லவேண்டியுள்ளது. எனவே அவற்றை யாழ்.மாவட்டத்தில் திருத்திக்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-125)



# 100 மெட்ரோ பஸ்கள் விரைவில சேவையில்

கொழும்பு, ஜூன் 4

பொதுப் போக்குவரத்துச் சேவைகளை நவீனமயப்படுத்துவதற்காக இலங்கைப் போக்குவரத்துச்சபையின் கீழ் முன்னோடிக் கருத்திட்டமாக அதிசொகுசு, உயர் தொழிநுட்பத்துடன்கூடிய பஸ் வகையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# வடக்கு பிரதம செயலருடன் இந்தியத் துணைத்தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி வடமாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட தனுஜா முருகேசனுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழில் சந்திப்பொன்றை நடத்தினார்.



இந்தச் சந்திப்பின்போது இந்தியாவின் ஆதரவுடன் நடைபெறும் வீடமைப்பு, எரிசக்தி, சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை அவர்கள் பரிசீலித்ததுடன் வர்த்தகம், வணிகம், திறனறிவு, மேம்பாடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் வழிகளையும் கலந்துரையாடினர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அதனால் பிரச்சினை எதுவும் ஏற்படுவதற்கில்லை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் ஆலயங்களை தரிசிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். காலையிலேயே கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும். நீண்ட நாளாக எதிர்பார்த்த சுபச் செய்தி இன்று கிடைக்கக்கூடும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய் வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** அரசாங்க அதிகாரிகளின் ஆதரவில் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தையின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். மறைமுக எதிரிகளின் தொல்லைகள் விலகும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தேவையற்ற செலவுகள் எது வும் ஏற்படாது. ஆனால், மற்றவர்களுடன் வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். பிள்ளை களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது

**துலாம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். காரியங்கள் இழுபறிக்குப் பிறகே முடியும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாய்மாமன் வழியில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியூ ரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார்.

**தனுசு:** முக்கிய முடிவுகளை துணிந்து எடுப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாகும். உறவினர்களால் சில நன்மைகள் ஏற்படக்கூடும். சகோதரர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** சிலருக்கு நீண்டநாளாக தடைப்பட்டு வந்த தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**கும்பம்:** தாயின் உடல் நலனில் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவிசெய்வது ஆறுதலாக இருக்கும்.

**மீனம்:** இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பாராத விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி கிடைக்கக்கூடும்.

# நல்லைக்குமரன் 33 ஆவது மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படவுள்ள "நல்லைக்குமரன்" 33 ஆவது மலருக்காக ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அனுப்பப்படும் ஆக்கள் கட்டுரைகளாயின் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும். ஏற்கனவே நல்லைக்குமரன் மலரில் அல்லது வேறு நூல்களில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்படவேண்டும். ஆக்கங்களை மின்னஞ்சல் அல்லது இறுவட்டுக்கள்மூலம் அனுப்புவது அவசியமாகும். மென்பிரதியாக அனுப்பப்படாத ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆக்கங்களுடன் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு 25 ஆம் திகதிக்கு முன்னர் NALLAIKUMARAN 2025@GMAIL.COM எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 4

கட்டடக் கலைஞர் இ.மயூரநாதனின் "யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு" நூல் வெளியீட்டு விழா இன்று 4.ஆம் திகதி மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகக்கலந்துகொள்வார். நிகழ்வில்புவியியல்துறைத் தலைவர் நாக. பிரதீபராஜா அறிமுகவுரையினையும் பேராசிரியர்கள் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தா.சனாதனன் மற்றும் ம.நிலாந்தன் ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நூலாசிரியர் இ.மயூரநாதன் ஏற்புரையையும் நிகழ்த்துவர். யாழ்ப்பாண நகரத் திட்டமிடல், அதன் வரலாற்று இசைவு ஆகியவற்றில் ஆர்வமும், தொடர்புமுடைய மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)



# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். ஜூன் 4

ஊரெழு கணேச வித்தியாசாலையில் தரம் 6 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு 'புத்தாக்கங்களை மேற்கொள்ளுதல்' தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது. யாழ். ஐ.ரி.ஹப் எனும் அமைப்பு மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளது. (ச)

# ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

கேகாலை, ஜூன் 4

கேகாலை மாவனெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனகம பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மாவனெல்ல பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 350 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 22 ஆயிரத்து 600 ரூபா பணம் மற்றும் 9 கையடக்கத் தொலைபேசிகள் என்பனவும் மீட்டுள்ளன. (ச-25, 28)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

நாவற்குழி அருள்மிகு சித்திர வேலாயுதர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ பிரதிஷ்டாமஹாகும்பாபிஷேக விழா எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.


நாளைமறுதினம் வியாழக்கிழமை கர்மாரம்பம் ஆரம்பமாகும். 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணியிலிருந்து மாலை 4மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-41-159)

★★★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 4

மானிப்பாய் வடக்கு அருள்மிகு பெரிய தம்பிரான் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6மணி முதல் கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, திரவியவிபாகம், பத்திரிகாபடனம், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், ஏனைய சாந்திக் கிரியைகளும் மாலை 6மணிக்கு புண்ணியாகவாசனம், கடஸ்தாபனம், விம்பஸ்தாபனம் முதலான கிரியைகளும் இடம்பெறும். 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணி முதல் விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், காலை 10மணி முதல் மாலை 4மணி வரை பால்காப்புச் சாத்துதலும், விசேட திரவிய ஹோமம் முதலான கிரியைகள் இடம்பெற்று விபூதிப் பிரசாதம் வழங்கலும், மாலை 6மணிக்கு விநாயகர் வந்தனம், ஹோம பூஜைகள், தேவார திருமுறை பாராயணமும் இடம்பெறும். 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், ஹோம வழிபாடுகள், வேத மந்திரங்கள், மங்கள் வாத்தியங்கள் நாதகீதம் முழங்க பகல் 11மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வரப் பூஜையும் இடம்பெறும். (ச-41)



# சண்டிலிப்பாயில் கசிப்புடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம். ஜூன் 4

சண்டிலிப்பாய் மேற்கில் 200 லீற்றர் கோடா மற்றும் 19.5 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இ.எஸ் அபயசேகர தெரிவித்துள்ளார். (27 வயதான) சுன்னாகத்தைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்டவராவார். (ச-25, 125)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மோகனதாஸ் சனசமூக நிலையத்தினர், சாவகச்சேரி பிரதேசசபையினர் ஆகியோர் மட்டுவில் பகுதி மக்கள் பங்கேற்புடன் தூய்மைப்படுத்தும் பணியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னெடுத்தனர்.

இதன்போது சேகரிக்கப்பட்ட கழிவுகள் பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்தின் மூலம் அகற்றப்பட்டன. (ச-25,28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

அன்பும் மரியாதையும் இருப்பவன் உலகத்தில் எதையும் சாதித்துவிடுவான். தீமை செய்பவனும் அவனிடம் பணிவான்.

– வாரியார் –

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மீண்டும் கொரோனா!


இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டிருக்கின்றது. அயல் நாடான இந்தியாவில் அண்மைய நாள்களில் 4 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது, அண்மைய காலங்களில் 32 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருக்கின்றனர். இந்த நிலையில்தான் ஆசியாவில் பரவும் கொரோனா வைரஸ் திரிபின் பரவல் இலங்கையிலும் இனங்காணப்பட்டிருக்கின்றது என்று இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. அந்த அறிவிப்பு வெளிவந்தகையோடு ஒன்றரை வயதுக் குழந்தையின் சாவும் கொரோனாவால் நிகழ்ந்ததென்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கொரோனாப் பெருந்தொற்றின் பின்னர், அவ்வப்போது புதிய புதிய கொரோனா வைரஸ் திரிபுகள் அடையாளம் காணப்பட்டிருந்தாலும் அவை பெரியளவில் பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கும் புதிய வைரஸ் திரிபுப் பரவல் அயல்நாடான இந்தியாவில் சற்று வீரியமடைந்திருக்கின்றது. ஒரு சில வாரங்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தை நெருங்கியிருக்கின்றது. இலங்கைக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்களே முதலிடத்தில் உள்ள நிலையில், இந்தக் கொரோனா வைரஸ் பரவலை இலங்கை உன்னிப்புடன் அவதானிக்கவேண்டியிருக்கின்றது.

கொரோனா வைரஸின் தற்போதைய பரவல் தொடர்பாக அச்சம்கொள்ளத் தேவையில்லை என்று இலங்கை சுகாதாரத்துறை கூறுகின்ற போதும், சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவது புத்திசாலித்தனம் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால் பொதுமக்கள் இவ்வாறான சுகாதார ஆலோசனைகளைக் காதில்வாங்குவதில்லை என்பதால், கொரோனா வைரஸ் பரவலுக் கான கதவுகள் நாட்டில் எப்போதும் திறந்தநிலையிலேயே இருக்கின்றது. கொரோனா வைரஸ் பரவலால் முன்னரைப் போன்று முடக்க நிலைமை ஏற்படாது என்கின்றபோதும், ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு சுகாதாரத்துறை முன்னேற்பாடுகளுடன் இருப்பது அவசியமானது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான முறையான திட்டம்இதுவரையில்நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆசியாவில் பரவும் கொரோனா வைரஸ் திரிபு நாட்டுக்குள்ளும் இனங்காணப்பட்டிருக்கும் நிலையில், தொற்றின் ஆழத்தைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத்துறை முன்னெடுக்கவேண்டும். நாட்டின் பொருளாதார நிலைமையில், இவை அரசாங்கத்துக்கு மேலதிகச் சுமைகள் என்றாலும் அதைக் காரணம் காட்டி மக்களின் பாதுகாப்பைப் புறந்தள்ளிவிட முடியாது. ஆரம்பத்திலேயே முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்வதே சிறப்பானது என்பதைப் புரிந்துகொண்டு சுகாதாரத் துறையினர் இந்த விடயத்தில் கவனத்துடன் செயற்படவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# இந்தியஒப்பந்தத்தால் நாடு காட்டிக்கொடுப்பு



கொழும்பு, ஜூன் 4

**இலங்கை - இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் ஊடாக அநுரவின் அரசு இலங்கையைக் காட்டிக்கொடுத்து விட்டது. அதனால்தான் அந்த ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதற்கு அரசு தயங்குகிறது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் இன்னும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளோம். ஆனால், சமர்ப்பித்துவிட்டதாக ரில்வின் சில்வா கூறியுள்ளார். அது பொய். பல ஒப்பந்தங்களை அரசு இரகசியமாக வைத்துள்ளது. எரிசக்தி தொடர்பான ஒப்பந்தம் ஒன்றின் பிரதி என்னிடம் கிடைத்தது. அதை நான் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் சமர்ப்பித்தேன். அந்த ஒப்பந்தம் பிழையென்று அரசு சொல்லவுமில்லை, அதற்கு எதிராக் அவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யவுமில்லை. இதன்மூலம் அந்த ஒப்பந்தம் சரியானது என்று உறுதியாகிறது. அதுபோல்தான் இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தினால். நாட்டையும்நாட்டு மக்களையும் பிழையாக வழிநடத்த வேண்டாம் - என்றார். (ச-75)

# கெஹலியவுக்கும் மகனுக்கும் பிணை



கொழும்பு. ஜூன் 4

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ச-இ)

# ஆவணங்கள் பதிவு; நடமாடும் சேவை

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டரீதியான ஆவணங்கள் வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை பிரதேச செயலக மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலங்கடந்த பிறப்பு மற்றும் இறப்பு , திருமண சான்றிதழ்கள் மற்றும் முதியோர் அடையாள அட்டை போன்ற ஆவணங்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# பாதாளக்குழுக்கு எப்படி கடவுச்சீட்டு?

## *விசாரணை செய்யுமாறு ஜனாதிபதி அறிவுறுத்து*



யாழ்ப்பாணம், ஜூன் 4

சாதாரண பிரஜை ஒருவர் கடவுச்சீட்டுப் பெற விரும்பினால் குடிவரவு குடிய கல்வுத் திணைக்களத்திற்குச் செல்லவேண்டும். தனது புகைப்படம், கைவிரலடையாளம் என்பவற்றைச் சமர்ப்பிக்கவேண்டும். ஆனால் பாதாள உலக தாதாக்கள் மூன்று, நான்கு கடவுச்சீட்டுகளை வைத்திருக்கின்றனர். இது எப்படிச் சாத்தியம்? இந்தக் கடவுச்சீட்டு மோசடி தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார். (ச-33-6)

# வாயுத் துப்பாக்கிக்கு விண்ணப்பியுங்கள்

சாவகச்சேரி, ஜூன் 4

தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்குகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன. வாயுத்துப்பாக்கி தேவைப்படும் விவசாயிகள் தமது முழுப்பெயர், முகவரி, அடையாள அட்டை இல, தொலைபேசி எண், பயிர்செய்யும் காணியின் பரப்பு , பயிரின் வகை ஆகிய விபரங்களை தத்தமது பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இன்று புதன்கிழமை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

நாளை வியாழக்கிழமை- வைகாசி 22
05.06.2025
சுபநேரம் : 07.22- 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலக சுற்றாடல் தினத்தையொட்டி பண்ணைப்பகுதி சுத்தப்படுத்தல்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு யாழ். பண்ணை கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ். மாவட்ட உதவி பணிப்பாளர் தவகிருபா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பண்ணை கடற்கரை வளாகத்தில் காணப்பட்ட கழிவுகள் தரம்பிரிக்கப்பட்டு தூய்மைப்படுத்தல் பணிகள் இடம்பெற்றன.

நிகழ்வின் பிரதம அதிதியாக யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்ட பிரதி பணிப்பாளர் சூரியராஜா , யாழ். மாவட்ட விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி டி.எல். இகலகமகே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர், யாழ். பொலிஸ்நிலைய சுற்றாடல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினர், கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாநகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தன்னார்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-33-125)

### பொலித்தீன் பாவனை ஒழிப்பு

# விழிப்புணர்வு நடைபவனி! யாழ்ப்பாணத்தில் நாளை

**யாழ்ப்பாணம், ஜூன் 4**

**'சேவ் லைப்' நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இலங்கைத்தீவில் பொலித்தீன் பாவனையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபவனி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என்று நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சுதர்சிகா தெரிவித்துள்ளார்.**

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அதன்படி நடைபவனி நாளை 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். பொது நூலக பின் நுழைவாயில் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு நூலகத்தின் பிரதான நுழைவாயில் வரை நடைபெறவுள்ளது. இதில் மாணவர்கள், பொதுநல விரும்பிகள் எனப் பலரும் கலந்து நிகழ்வை வலுப்படுத்தி விழிப்புணர்வின் நோக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல ஒத்துழைக்குமாறும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

## மருத்துவமனைக்குள் தகராறு; பருத்தித்துறையில் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 4

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குள் மதுபோதையில் தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்த வீதி விபத்தில் காயமடைந்த கம்பர் மலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்கு ஒரு குழு சம்பவ தினத்தன்று இரவு மருத்துவமனைக்குள் நுழைந்தது.

பார்வையாளர் நேரம் முடிந்துவிட்டது என்று காவலாளிகள் தடுத்தபோது அவர்களை மீறி அந்தக் குழு உள்ளே நுழைந்துள்ளது. மதுபோதையில் இருந்த அவர்களை மருத்துவமனைப் பொலிஸார் தடுக்க முயன்றபோது, அவர்களைத் தகாத வார்த்தைகளால் பேசி கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளனர். அதையடுத்து இருவர் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதவான் அனுமதித்ததுடன், வழக்கை எதிர்வரும் 24ஆம் திகதிக்குத் தவணையிட்டார். (எ-100)




கொழும்புத்துறை புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கலும், தீமிதிப்பும் அண்மையில் பக்திபூர்வமாக இடம்பெற்றன. (ச-25, 17)



அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் உதயன் பணிமனைக்கு அண்மையில் உத்தியோகபூர்வமாக வருகை தந்திருந்தார்.

இதன்போது உதயன் குழுமத் தலைவர், பத்திரிகையின் ஆசிரியர், ஆசிரியபீடத்தினர் ஆகியோருடன் சமகால நிலைமைகள், ஊடக சுதந்திரம் உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ச-125)



## நாகதம்பிரான் ஆலய வீதி காப்பெற்றாகப் புனரமைப்பு

வவுனியா, ஜூன் 3

வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதிக்கு காப்பாற் இடும் பணி வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. 24 மில்லியன் ரூபா செலவில் 1.75 கிலோ மீற்றர் வீதிக்கு காப்பெற்றும் மீதமாக உள்ள 4.35 கிலோமீற்றர் வீதிக்கு கிரவலும் போடப்படவுள்ளன. (ச-33-110)

## சங்குக் கூட்டணியினர் வவு.வில் பதவியேற்பு




வவுனியா, ஜூன் 4

ஜனநாயகத் தமிழ்த்தேசிய கூட்டணியின் சார்பில் வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

நிகழ்வு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கூட்டணியின் செயலாளர் நாகலிங்கம் ரட்ணலிங்கம், தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்தின் முக்கியஸ்தரான க.சந்திரகுலசிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சியின் பேச்சாளர் க.துளசி, தமிழீழ விடுதலை இயக்கம் சார்பில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியவர்களின் முன்னிலையில் இடம்பெற்றது. (ச-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் மருத்துவமனை தரமுயர்த்தப்படவேண்டும்

## மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜூன் 4**

**கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரிப் பணி மனைப் பிரிவிலுள்ள தருமபுரம் மருத்துவமனையை தரமுயர்த்தி சிறந்த சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், போதியளவிலான புதிய கட்டடங்கள் வசதிகள் இருந்தபோதிலும் மக்களுக்கான சிகிச்சையை முழுமையாகப் பெறமுடியாத நிலையிலுள்ளது.

தருமபுரம் மருத்துவமனையை நம்பி 21 கிராமங்களுக்கு அதிகமான மக்கள் தமது மருத்துவ சேவையைப் பெற்றுவருகின்றனர்.

இருப்பினும் தருமபுரம் மருத்துவமனையில் ஒரேயொரு மருத்துவரால் மாத்திரமே நாளாந்தம் சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இங்கு சிகிச்சைக்குவரும் நோயாளர்கள் ஒருநாள் பொழுதை மருத்துவமனையிலேயே கழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள், கிளினிக் நோயாளர்கள், அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் அனைவருக்கும் ஒரேயொரு மருத்துவராலேயே சிகிச்சையளிக்கப்படுகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் தற்பொழுது இயங்கிவரும் தருமபுர மருத்துவமனையில் மகப்பேற்று வசதி, குருதிப்பரிசோதனை, அவசர சிகிச்சைப் பிரிவு எனப் பல சிகிச்சைகள் வழங்கப்பட்டுவந்தன.

தற்பொழுது ஒரு குருதிப்பரிசோதனை செய்வதாயின் கிளிநொச்சி மருத்துவமனைக்குச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தருமபுர மருத்துவமனையை தரமுயர்த்தி சிறந்த சிகிச்சை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-41-113.)




படம். ஐ. சிவசாந்தன்

நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான தேவி மஹோற்சவம் நேற்றுமுன்தினம் காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச)



கைதடி மகளிர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் கொண்டாட்டம் கைதடி மகளிர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தலைவர் திருமதி பொ.ஸ்ரீரஞ்சனா தேவி தலைமையில் கைதடி இணுங்கித் தோட்ட அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (ச)



# நாட்டுப்பற்றாளர் நடேசனின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜீன் 4

துணை ஆயுதக்குழுவினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்றது.

யாழ்.வடமராட்சி ஊடக இல்லத் தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஊடக இல்லத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்கேற்று ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் திருவுருவப்படத்துக்கு மலர்தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலிசெலுத்தினர். (ச-41-100)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 01 . 1942

இறப்பு 02 . 06 . 2025



## திருமதி.நடராசா மகேஸ்வரி

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (02.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராசா-இராசம்மா தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நாகையா-இராசம்மா தம்பதியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நடராசா (ஓய்வு பெற்ற நிறைவேற்று தர அதிகாரி-இந்தியன் ஓவசீஸ் வங்கி (Indian overseas Bank)-கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், நளினி (சுவிஸ்), சுஜாதா (கனடா), சுசி (பிரான்ஸ்), சியாமளா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்-யாழ்ப்பாணம்), சுதர்சன் (நிர்வாக உத்தியோகத்தர்-தென்னை பயிர்ச்செய்கை சபை- பளை), சுஜீவன் (ஆசிரியர்-முல்லைத்தீவு கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரா (சுவிஸ்), ஜெயக்குமார் (பொறியியலாளர்-கனடா), சிவபாலன் (பிரான்ஸ்), ஸ்ரீமுரளி (அதிபர்-புன்னாலைக் கட்டுவன் இ.த.க பாடசாலை), தர்சினி (பதிவாளர்-கனிம உரிமம், புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்-பிராந்திய காரியாலயம்- யாழ்ப்பாணம்), கயல்விழி (ஆசிரியர்- தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபியா, டெனிஷ் (சுவிஸ்), வர்சன், அருசன் (கனடா), சினுஜன், கபிநயா, ஹன்சிகா, கனிஸ்கா, நிஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சயன், அமீரா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், பரமேஸ்வரி மற்றும் சர்வேஷ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, திருவிளங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (05.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**E.M.V.நாகநாதன்,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 405 1982**
**077 033 4256**



# சட்ட ஆலோசனை முகாம்!

மன்னார், ஜூன் 4

மன்னாரில் சட்ட ரீதியான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியாத மக்களின் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கும் இலவச சட்ட ஆலோசனை முகாம் 'ரைட்டு லைப்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகளான சுதர்சனா மற்றும் ஜப்சன் பீரிஸ் ஆகியோரினால் கருத்துரைகள் வழங்கப்பட்டன. இந்த ஆலோசனை முகாமில் சட்டத்தரணிகள் உட்பட மன்னார் மாவட்ட முதலுதவி மையத்தின் மாவட்ட இணைப்பாளர் டிலக்சன் மற்றும் இணை செயற் பாட்டாளர்களான விஜிதன், டிலோஜன் உட்பட பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக.

# மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 10 . 1961



இறப்பு 03 . 06 . 2025

## கனகரத்தினம் இரவிச்சந்திரன் (ரவி)

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இரவிச்சந்திரன் நேற்றைய தினம் (03.06.2025) செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தனலக்ஷிமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் மாணிக்கம் தம்பதியினரின் மருமகனும், பூவழகியின் அன்பு கணவரும் கிருஷ்ணகோபி, பபிலா, ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜீவனின் அன்பு மாமனும், இனிகாவின் பாசமிகு பேரனும், நகுலேஸ்வரி, மங்களேஸ்வரி, அமுதமலர், அகிலாண்டேஸ்வரி (சுவிஸ்), இரத்தினகுமார் (கனடா), கமலேஸ்வரி, கிருஸ்ணவேனி (நோர்வே), தர்மகுமார் (கனடா), சசிகுமார் (சுவிஸ்), கேதீஸ் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2025) புதன்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடை பெற்று பிற்பகல் 02 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.
077 953 0787

(CS/3324) D*

தகவல் - குடும்பத்தினர்.

# வாள்வெட்டை ஒழியுங்கள்; பூநகரி மக்கள் போராட்டம்



பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிராய் குளத்துக்கு அண்மையில் இனந்தெரியாத நபர்களால் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவருக்கு நீதிகோரி பிரதேச மக்களால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'வாள்வெட்டுகளை சட்டத்தின் முன்நிறுத்துங்கள், உயிரைப் பறித்தவரை ஒருபோதும் மன்னிக்காதே, போதையை கூண்டோடு ஒழி' போன்ற பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டம் இடம்பெற்றது.

தொடர்ந்து பூநகரிப் பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் பொதுமக்களின் கையொப்பம் அடங்கிய மனுவையும் போராட்டக்காரர்கள் கையளித்தனர்.

(ச-113,28)

## நாகபூஷணி திருமண சேவை இடமாற்றம்

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில்)
மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாக திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.
077 138 7596 , 071 999 9306

(CS/3325) (A) D*

# பொதுக்கூட்ட அறிவித்தல்

கும்பழாவளை பிள்ளையார் கோயில் தொண்டர் சபையின் ஆண்டு பொதுக்கூட்டமும் மஹோற்சவ ஒன்றுகூடலும் எதிர்வரும் ஞயிற்றுக்கிழமை (15.06.2025) மாலை 06.00 மணிக்கு இடம்பெறும். தொண்டர்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர் - திரு. க. கஜானன்

(CR/45275) D*

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 10 . 1951



மறைவு 02 . 06 . 2025

## பெனடிற் யோசவ் செபஸ்ரியாம்பிள்ளை (அலோசியஸ்) (வாகனத் திருத்துநர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிற் யோசவ் செபஸ்ரியாம்பிள்ளை (அலோசியஸ்) அவர்கள் நேற்றுமுன்தினம் (02.06.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கால்ஞ்சென்றவர்களான மேரியோசவ் - சவரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி குருக்கள் - செசிலியா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி ஸ்ரெலா (பத்மா) அவர்களின் பாசமிகு கணவரும், பிறின்ஸ் (LOLC நிதிநிறுவன துணைமேலாளர்-யாழ்ப்பாணம்), ஜோயன்ஸ் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜொலிற்றா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், றோஸ்மேரி, காலஞ்சென்றவர்களான யேசுதாசன் , பிரான்சிஸ் சேவியர் மற்றும் மேரிடெய்சி, சாமிநாதர், லூயிஸ் மொன்பேட் ஆகியோரின் அருமைச் சகோதரரும், டேவிட் றெஜினா (அலமு-நீர்கொழும்பு), குயின்ராஜ் (லண்டன்), காலஞ்சென்ற செபமாலை மேரி (கனடா) மற்றும் சத்தியசீலன் (லண்டன்), செபமாலைதாசன் (ஓய்வு பெற்ற உப தபால் அதிபர்), மரியதாஸ் (நெதர்லாந்து), சகாயமேரி (லண்டன்), அடைக்கலமேரி (கனடா), மரியநாயகம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அபிகெயிலின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.06.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
செபஸ்ரியாம்பிள்ளை பிறின்ஸ் (மகன்)
077 977 0451

ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(CS/58464) J-1

# மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 05 . 1964



விண்ணில் 02 . 06 . 2025

## நிக்ஷன் அந்தோனியாப்பிள்ளை

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நிக்ஷன் அந்தோனியாப்பிள்ளை கடந்த (02.06.2025) திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் நிக்ஷன் (கனடா) அவர்களது பாசமிகு துணைவியாரும் தஸ்நெவியாவின் அன்புநிறை தாயுமாவார். அன்னாரின் ஆத்மா நித்திய இளைப்பாற்றியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

**இறைவன் அடி தேடி நீர் சென்றீரோ!**

**பரலோக தேவன் தன் பக்கத்தில் அழைத்துக் கொண்டாரோ!!**

**பார்தனில் உம் ஆவி துறந்து பரிசுத்த ஆவியிடம் சென்றீரோ!!!**

**உம் ஆன்மா நித்திய பேரொளியில் கலந்து சிறக்கட்டும் ஆமென்!!!!**

தொடர்புகளுக்கு:
+1438 765 5589
கணவர்-நிக்ஷன்
(கனடா)

பிரிவால் துயருறும்
கணவர், மகள், தாயார்,
சகோதரர்கள் மற்றும்
அன்புக்குரிய பள்ளித் தோழி
Jaffna English Convent
(1979 Batch)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NDB லீசிங்

கப்பலில் இருந்து, வீதிக்கு எளிதில் லீசிங்

உத்தரவாதம் அளிப்பவர் மற்றும் முற்பணம் அவசியமில்லை

ரூ. 100,000.00/- இற்கு தவணைக்கட்டணம் ரூ.1,766/-

மீள் செலுத்தும் காலம் 7 வருடங்கள் வரை

011 744 8888

www.ndbbank.com A (lka) Fitch Rating - நெஷனல் டிவலெப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது (PQ. 27), இலங்கை மத்திய வங்கியின் கீழ் இயங்கும் ஒரு வர்த்தக வங்கியாகும்.







# ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் சம்பியன்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியனாகியுள்ளது.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பெங்களூரின் ஆரம்ப வீரர்களாக ஷோல்ட் மற்றும் கோலி இருவரும் களமிறங்கினார்கள். 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஷோல்ட். விராட் கோலியும், மயங்க் அகர்வாலும் சிறப்பான இணைப்பாட்டத்தை அமைத்தனர். ஆனால், மிகவும் மந்தமாகவே இன்னிங்ஸ் நகர்ந்து சென்றது. 24 ஓட்டங்களுடன் மயங்க் அகர்வால் ஆட்டமிழந்தார். விராட் கோலியும் 43 ஓட்டங்களுடன் வீழந்தார். இந்த 43 ஓட்டங்களுக்காக அவர் 35 பந்துகளை எதிர்கொண்டார். படிதார், லிவிங்ஸ்ரன், ஜிதேஷ் சர்மா மூவரும் முறையே 26, 25, 24 ஓட்டங்களைப் பெற்று அணியைப் பலப்படுத்த, முடிவில் 190 ஓட்டங்களை பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி பெற்றது.

அர்ஷ்டீப் சிங், ஜெமிஷன் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர்கள் இருவருமே மந்தமான ஆட்டத்தை வழங்கினார்கள். பிரியான்ஸ் ஆர்யா 19 பந்துகளில் 24 ஓட்டங்களையும், பிரப்சிம்ரன் சிங் 22 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த மந்தமான ஆரம்பம் பஞ்சாப் அணியை இதிவரை பாதித்தது. பஞ்சாப் அணியின் பெரும் துடுப்பாட்டப் பலமான ஸ்ரேயஸ் ஐயர் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, வெற்றிக்காற்று பெங்களூரின் பக்கம் வீசத் தொடங்கியது.

நிஹல் வெதேரா 18 பந்துகளை எதிர்கொண்டு 15 ஓட்டங்களைப் பெற்றார். அவரின் இந்த மந்தமான இன்னிங்ஸ் பஞ்சாப்பின் தோல்வியை உறுதிசெய்யும் படியாக அமைந்தது.

இறுதி ஓவரில் 29 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில், 22 ஓட்டங்களை விளாசினார் ஷஷான் சிங். இதையடுத்து 6 ஓட்டங்களால் வெற்றிபெற்று, 18ஆவது ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் சம்பியனானது.

(ம-இ)



# தமிழரசின் உறுப்பினர்கள் வவுனியாவில் பதவியேற்பு

வவுனியா, ஜூன் 4

இலங்கை தமிழரசுக்கட்சி சார்பில் வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகமான தாயகத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள், விகிதாசார உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தமது சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டனர். தமிழரசுக்கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியவர்களின் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-110)





பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் 175 ஆவது ஆண்டு யூபிலி பெருவிழாவை முன்னிட்டு ஆலயத்தின் முன்வீதியில் அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளது. (ச-25-17)

# ஊழல் ஒழிப்புச் செயற்றிட்டத்துக்கு அவுஸ்திரேலியா அரசு பாராட்டு

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அவுஸ்திரேலிய துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தல் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போதே இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் பாராட்டுவதாகவும், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், சுற்றுலா மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவது, இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் அவுஸ்திரேலிய துணைப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் தெரி வித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.06.2025
புதன்கிழமை

# புதன் பொய்கை

எதிர்பாராதவற்றை நடக்க அனுமதிக்கும்போது மட்டுமே, நாம் வாழ்க்கையின் அதிசயத்தை முழுமையாகப் புரிந்துகொள்வோம்.

- பௌலோ கொய்லோ



உலக சுற்றாடல் தினம் ஜூன் 5 அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

# சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுப்போம்

1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது நிறுவப்பட்டது. இது தேசிய சுற்றாடல் சட்டத்தின் அதிகாரங்களுக்கு ஏற்ப இலங்கைத் தீவின் சுற்றாடலைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான விரிவான ஒழுங்கு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துகிறது. சுற்றாடல் நிலையைப் பராமரிக்கும் உயர்நோக்குடன் இதற்குத் தேவையான பல விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அனைவருக்கும் உயர்தரமான தூய காற்றை வழங்குதல்**

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றுப்புற வளித்தரத்தின் ஒழுங்கு விதிகள்மூலம், நமது சுற்றுப்புற வளிமண்டலத்தின் தரமான நிலையைக் கண்காணிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காற்றின் தரம் மிகவும் நல்ல நிலையில் இருத்தல் உயிரினங்களின் வாழ்விற்கு இன்றியமையாத காரணியாகும்.

காற்று மாசுகளுக்கான தரநிலைகள் மற்றும் வரம்புகள்

| மாசுபடுத்தி | 1 மணி (µg/m³) | 8 மணி (µg/m³) | 24 மணி (µg/m³) | ஆண்டு (µg/m³) |
|---|---|---|---|---|
| துகள்மாசுகள் ($PM_{10}$) | - | - | 100 | 50 |
| துகள்மாசுகள் ($PM_{2.5}$) | - | - | 50 | 25 |
| நைதரசன் டைஒக்சைட் ($NO_2$) | 250 | 150 | 100 | - |
| கந்தகவீரொட்சைட்($SO_2$) | 200 | 120 | 80 | - |
| ஓசோன் ($O_3$) | 200 | | - | - |
| காபன் மோனோக்சைட்டு(CO) | 30,000 | 10,000 | - | - |

**வாகன வெளியீடுகளுக்கான தரவுகள்:**

ஆராய்ச்சி அறிக்கைகளின்படி, வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசுபடுத்தும் வாயுக்கள் காற்றின் தரத்தை மாசுபடுத்தும் முக்கிய மூலங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. சில முக்கிய நகர்ப்புற பகுதிகளில் காற்றின் தரம் குறைவதற்குக் காரணமான மாசுபடுத்தும் மூலங்களில், வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசுபடுத்திகள் சுமார் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலையைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காக, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில், அந்த விதிமுறைகள் யூரோ 4 அல்லது அதற்கு மேற்பட்ட வெளியீட்டுத் தரநிலைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஒழுங்கு விதிகள் இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**தொழிற்சாலைகளின் வெளியீடுகளுக்கான தரவுகள்:**

மற்றொரு பரிமாணமான தொழிற்சாலைகளால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த, மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் முறைமை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறைகளைப் பயன்படுத்தி ஒழுங்குபடுத்தும் பணிகளை மேற்கொள்கிறது. அதன்படி, நம் நாட்டில் 50,000 க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வாங்கும் செயல்முறை மூலம் சுற்றாடலை மாசுபடுத்துவதைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தப்பட்டு இயங்குகின்றன. அவற்றில், சுமார் 900 தொழிற்சாலைகள் உயர் அளவு காற்று மாசுபடுத்திகளை வெளியிடும் தொழிற்சாலைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தத் தொழிற்சாலைகளுக்குக் காற்று மாசுக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தி வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும் மாசுபடுத்தும் வாயுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக, 2019 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஒழுங்குவிதிமுறைகளின் கீழ் தொழிற்சாலைகளால் வளிமண்டலத்திற்கு வெளியிடப்படும் காற்று மாசுபடுத்திகளுக்கான அனுமதிக்கப்பட்ட எல்லை வரம்புகள் மற்றும் தொடர்புடைய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. துகள்கள், கந்தக டைஆக்சைட், நைட்ரஜன் டைஆக்சைட், கார்பன் மோனாக்சைடு, ஆவியாகும் கரிமச் சேர்மங்கள், ஹாலோஜன்கள், புளோரின், குளோரின், ஹைட்ரஜன் குளோரைடு, ஹைட்ரஜன் சல்பைடு, கன உலோகங்கள், அமோனியா, டையாக்சின்கள் மற்றும் ஃபியூரான்கள் போன்ற மாசுபடுத்தும் வாயுக்களை அடிப்படையாகக்கொண்டு விதிக்கப்பட்டுள்ள வாயு உமிழ்வுக் கட்டுப்பாட்டுத் தரநிலைகளும் அந்தத் தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிமுறைகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சில தொழிற்சாலை செயல்முறைகளால் குறிப்பிட்ட கட்டுப்பாடு இல்லாமல் வெளியிடப்படும் மாசுபடுத்திகள் "நிலையற்ற தூசி வெளியேற்றுகை" எனப்படுகின்றன. அப்படி வெளியிடப்படும் வெளியீடுகளான பறக்கும் துகள்கள், மீத்தேன் அல்லாத ஆவியாகும் கரிமச் சேர்மங்கள், அமிலப் புகைகள் மற்றும் அமோனியா, அஸ்பெஸ்டாஸ் நார்கள் போன்ற அளவுருக்களுக்கான கட்டுப்பாட்டுத் தரநிலைகளும் அந்த உத்தரவுகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**பிளாஸ்டிக் மாசுபாடு மற்றும் தரவுகள்**

"பிளாஸ்டிக்கால் ஏற்படும் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவோம்" என்பது இந்த ஆண்டு சுற்றாடல் தினத்தின் கருப்பொருளாகக் காணப்படுகிறது. பிளாஸ்டிக் உற்பத்தி, மறுசுழற்சி, கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் எரியூட்டிகளின் மூலம் எரித்தல், கழிவு பிளாஸ்டிக்குகளைப் பயன்படுத்தி வலுசக்தி உற்பத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தின் கீழ் செயற்பட வேண்டிய அவசியமான செயற்பாடுகளாக தேசிய சுற்றாடல் சட்டத்தால் குறிப்பிடப்பட்டுள்ளன.

**திறந்தவெளிச் சூழலில் பொலித்தீன் பிளாஸ்டிக் எரிப்பு:**

மனித நடவடிக்கைகளால் ஏற்படும் வளிமண்டல மாசுபாட்டிற்கான மற்றொரு பிரதான காரணம், திறந்தவெளிச் சூழலில் குப்பை எரித்தலாகும். குறிப்பாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ளன. பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற கழிவுகளை திறந்தவெளியில் எரிப்பதால், உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் புற்றுநோயை உண்டாக்கக்கூடிய வாயுக்களான டையாக்சின்கள், பியூரான்கள், பசுமைக்குடில் வாயுவான கார்பன் டைஆக்சைடு, கருங்கார்பன் மற்றும் மைக்ரோ பிளாஸ்டிக்குகள் போன்றவை வளிமண்டலத்தில் வெளியிடப்படுவதால், உயிரினங்களின் வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் உள்ளது. வீட்டு மட்டத்தில் மிக அதிகமாக நடைபெறும் இந்த முறையற்ற செயற்பாடு காரணமாக, முழு சமுதாயமும் கடுமையான சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக, 2017 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிகளின்படி, பிளாஸ்டிக் அடங்கிய குப்பைகளை திறந்தவெளியில் எரிப்பதைத் தடை செய்துள்ளது. நாடெங்கிலும் இந்த ஒழுங்குவிதிகள் இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எத்தனை சட்டங்கள், உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், மக்களின் நேரடித் தலையீடு மற்றும் நேர்மையான செயற்பாட்டுப் பங்களிப்பு இல்லாமல் இத்தகைய ஒழுங்கு விதிகளுக்கு முரணான முறையற்ற செயல்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் சவாலானதே.


# அம்மா...



சுமையாய் வந்த என்னை சுகமாய் ஏற்ற
தாயே
உன்னை சிதைத்து என்னை
வடித்தாயே
உறங்கா விழியாய் உயிர் காக்கும்
தேவியும் நீயே
உதிரத்தின் சாரமாய் உலகு தந்த
கோவிலும் நீயே
பாசமாய் தலைகோதி
பசி போக்கி
என் பிணிநீக்கி
பாராளும் சக்தியை தந்ததும் நீயே
மழலையின் சிரிப்பிலே மகிழ்வுற்று
மௌனமாய் துயரினை நீயே உண்டு
தியாகத்தின் உருவாய் நிலைத்திருக்கும்
தெய்வத்திற்கோ மறுபெயர் நீயே என் தாயே.

றிஸ்வி முஹம்மட்
றிஸான் அக்தார்
தமிழ் சிறப்புக் கற்கை மாணவன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தற்சார்பும் எம்மண்ணும்

ஆதம்பாவா பாத்திமா சாஜிதா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எமது வாழ்க்கையை சிறப்பாக வாழ உழைப்பு மிகவும் அவசியம். அதனடிப்படையில் நமது அன்றாடத் தேவைகளுக்காக எம்மைச் சுற்றியுள்ள சூழலைத் தரிசாகவிடாமல் அவற்றை பயனுறுதிமிக்க தற்சார்பு விவசாய நிலமாக மாற்றியமைப்பது தற்கால நடைமுறையில் அவசியமானதொன்றாகும். சுயசார்பு விவசாயம் என்பதற்குள் விவசாயம்மூலம் பெறும் நன்மைபயக்கும் விடயங்கள் பற்றி யாழ். மாவட்டம் வலிகாமம் பகுதிக்குட்பட்ட கோண்டாவில், இணுவில் மற்றும் உரும்பிராய் போன்ற இடங்களில் பல விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கருத்துகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

இங்கு வாழும் மக்கள் விவசாயப் பயிர்களாக வெங்காயம், மிளகாய், கறிமிளகாய், தக்காளி, துபாய் பூசணி, புகையிலை, பயிற்றை, மரவள்ளி, கோவா, வாழை, பப்பாசி மற்றும் திராட்சை போன்ற பலவற்றை கலப்பாக செய்துவருகிறார்கள். இப்பயிர்களுக்கான நிலங்களை தமது சொந்த பூமி, குத்தகைக்குரிய பூமி என்ற அடிப்படையில் காலநிலைக்கேற்பவும் மழை, வெயில் மற்றும் பனி என்பவற்றிற்கேற்பவும் தாவரப்பயிர்களைத் தெரிவுசெய்து நடுகை செய்து அவற்றினைப் பேணி அறுவடைசெய்கின்றனர். சிலவற்றை தமது அன்றாட வாழ்வாதாரத்துக்குப் பயன்படுத்துகின்றனர். ஏனையவற்றை சந்தையில் விற்பனைக்கு வழங்கி அதிலிருந்து சிறுதொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். யாழ். பகுதிகளில் பரப்பு என்ற அடிப்படையிலேயே விவசாயம் செய்யப்படுவதாகவும் அதன் அடிப்படையிலேயே குத்தகைக்குரியவர்கள் தமது பணத்தினைச் செலுத்துகின்றனர். ஒரு ஏக்கர் நிலமானது 16 பரப்புகளைக் கொண்டது. இதில் ஒவ்வொரு பரப்புக்குமான பணத்தொகை, செய்யப்படுகின்ற பயிர்வகைக்கேற்ப மாற்றமடையும். அதற்கிணங்க குத்தகையாக வழங்கப்படும். மேலும் சொந்த பூமியில் செய்வோர் தமது சொந்த பூமியிலேயே முதலீட்டை வைத்து பயிரினை மேற்கொள்ளுவர். இதன்போது பெருவாரியான இலாபத்தைச் சந்திக்கவும் நேரிடலாம். அதேபோல சில காரணங்களால் வைத்த முதலீட்டை மாத்திரம் பெறும் அறுவடையும் இடம்பெறலாம். சிலவேளைகளில் அழிவுகள் காரணமாக நட்டத்தையும் எதிர்நோக்கலாம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**வெங்காயம்:** வருடத்தில் இரண்டுமுறை பயிரிடலாம் என்றும் வெங்காயத்தின் விற்பனை, சந்தைக் கேள்வி போன்ற விடயங்களைப் பொறுத்து இலாபம் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஒரு பரப்புப் பயிருக்கு மூலதனச் செலவாகவும் ஆரம்பச் செலவாகவும் ஒரு இலட்சம் ரூபாய் முதலீடு செய்வதன் ஊடாக, ஐந்து இலட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட வருமானத்தைப் பெறலாம். சிலவேளை அவ்வாறு இல்லாமல் முதலீட்டை மாத்திரம் பெறக்கூடிய தன்மையும் இருக்கலாம் என பத்து வருட காலம் அனுபவம்மிக்க விவசாயி ஒருவரால் தெரிவிக்கப்பட்டது. வெங்காயச் செய்கை மழைக்காலங்களிலும், பனிக்காலங்களிலும் அதிகளவான பாதிப்பை எதிர்நோக்குகின்றது. பனிப் பூச்சித் தாக்கத்திற்கு வெங்காயச் செய்கை உள்ளாகும். இவ்வாறான தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு பூச்சிகொல்லிகளைப் பயன்படுத்தவேண்டி நேரிடும். எனினும் வெயிற் காலங்களில் சிறந்த விளைச்சலை பெற்றுத்தரக்கூடியதாகவும் வெங்காயம் காணப்படுகிறது. அதனடிப்படையில் இந்தப் பகுதிகளில் பச்சமுறியன், ஜப்னா லோக்கல் மற்றும் திருநெல்வேலி ரெட் ஆகிய வெங்காய வகைகள் மிகவும் பிரபல்யம்.

**வெயில் காலங்களில் சிறந்த விளைச்சலை பெற்றுத்தரக்கூடியதாகவும் வெங்காயம் காணப்படுகிறது. அதனடிப்படையில் இந்தப் பகுதிகளில் பச்சமுறியன், ஜப்னா லோக்கல் மற்றும் திருநெல்வேலி ரெட் ஆகிய வெங்காய வகைகள் மிகவும் பிரபல்யம்.**

**மிளகாய், கறிமிளகாய் :** மிளகாயை வருடத்துக்கு இருமுறையும், கறிமிளகாயை வருடத்துக்கு ஒருமுறையும் பயிர்செய்து அவற்றைப் பேணுவதனூடாக சிறந்த விளைச்சலைப் பெறமுடியும். மிளகாய் மற்றும் கறிமிளகாய்ச் செடிக்கு பல்வேறுவிதமான நோய்கள் தாக்குகின்றன. அதேபோல் பங்கசுத்தாக்கமும் பிரதானமான தாக்கமாக இத்தாவரங்களில் காணப்படுகிறது. இது விளைச்சல் வீதத்தை பெரிதும் பாதிக்கிறது. எனினும் மிளகாய் செடியானது வெயிற்காலத்திலும், மழைக்காலத்திலும் எனச் சிறந்த விளைச்சலைத் தரக்கூடிய ஒரு பயிராகக் காணப்படுகிறது.

**தக்காளி:** தக்காளிச் செடியானது வருடத்தில் மூன்று தடவைகள்கூட பயிரிடக்கூடியதான தாவரமாகும். அவற்றிலிருந்து சிறந்த விளைச்சலைப் பெறக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். தக்காளிச்செடி வருடத்தின் எந்தக் கால நிலைக்கும் பொருந்தும் விதமாகக் காணப்படுவதனால் இவை அதிக இலாபத்தை ஈட்டித்தரக்கூடியது. எனினும் இந்தப் பயிரிலும் காய், இலை போன்றவற்றில் பல்வேறுவிதமான பாதிப்புகளும் அழுகல் நோய் போன்றவைகளும் பூச்சி, புழுத்தாக்கங்களும் ஏற்படுகின்றன. உதாரணமாக அசுவினி, வெள்ளை ஈ, மாவுப்பூச்சி போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

**வாழை:** ஒரு பரப்புக் காணியில் 250 வாழைக்கன்றுகள் நடலாம். இது ஆரம்பத்தில் ஒரு பெரும் செலவாகக் காணப்பட்டாலும் அடுத்தடுத்த போகங்களுக்கு செலவு குறையும். தானாக வளரும் தன்மையும், பூச்சித்தாக்கம் மற்றும் நோய்த்தாக்கம் என்பன ஏற்படும் வீதமும் குறைவாகையால் அதிக செலவு ஏற்படாது. இவற்றைப் பயிரிட்டு அறுவடைசெய்வதென்பதும் இலகுவானதாகக் காணப்படும்.

முதலில் நட்டு வளர்ந்த வாழையினை தாய்த்தாவரம் என்றும் அதிலிருந்து வரும் குட்டிகளைக் குட்டித் தாவரம் என்றும் அழைப்பர். இக்குட்டிகளில் ஓர் இளங்குட்டியை மாத்திரம் விட்டுவிட்டு ஏனையவற்றை வெட்டிவிடுவர். எனவே ஒரு தாய்த்தாவரத்திற்கு ஒரு குட்டித் தாவரம் என்ற அடிப்படையிலேயே இவ்வாழைத் தாவரத்தினை வளர்ப்பர். நிலத்தின் ஒவ்வொரு பகுதிக்கும், அப்பகுதியில் இருக்கும் மண்ணுக்கும் ஏற்ப வாழையினங்களின் வளர்ச்சி இருக்கும். இதனடிப்படையில் இணுவில் பகுதியில் இதரை, கதலி, கப்பல்வாழை, செவ்வாழை மற்றும் யானைவாழை போன்ற இனங்கள் நன்றாக செழுமை பெறுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். அத்தோடு வாழைப்பழமானது ஒரு கிலோகிராம் 30 ரூபாய்க்கு விற்பனைசெய்யநேரும் பட்சத்திலும்கூட அவை இலாபகரமானதாகவே இருப்பதாகவும் தெரிவித்தனர்.

**கோவா:** கோவா வருடத்துக்கு இரண்டுமுறை பயிரிடக்கூடியதானது. இது பனிக்காலத்திற்கு மிகவும் பொருத்தமான தாவரம் என்றுதான் கூறமுடியும். அந்தவகையில் வெயில், மழைக்காலத்தைவிட பனிக்காலத்திலேயே இதன் வினைத்திறனான விளைவு கிடைக்கப் பெறும். இது பெரும்பாலும் மத்திய பிரதேசங்களில் அதிகம் பயிரிடக்கூடியது. எனினும் யாழ்ப்பாணத்திலும் கோவாச் செய்கையை சிறப்பாக மேற்கொள்வதனைக் காணமுடிகிறது. கோவாப் பயிரை புழுக்கள் அதிகம் தாக்கும் தன்மை காணப்படுகிறது. இதற்கு கிருமிநாசினிகள், புழுக்களுக்கான மருந்துவகைகள் அதாவது அபாண்ட், ரேடியம் போன்றவற்றைப் பயன்படுத்துவதனூடாக அவற்றைக் கட்டுப்படுத்தமுடியும்.

**திராட்சை:** திராட்சையை யாழ்ப்பாணப் பகுதிகளில் கொடிமுந்திரிகை என்ற சொல்லின் மூலமே அதிகளவான மக்கள் உபயோகப்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் கொடிமுந்திரிகைத் தோட்டச்செய்கையானது ஆரம்பச் செலவு அதிகமாகக் காணப்பட்டாலும்கூட அவற்றின் அடுத்தடுத்த போக விவசாயத்துக்கு குறைவான செலவே காணப்படுகிறது. கொடிமுந்திரிகையை பூச்சி மற்றும் வேறு தொற்றுநோய்கள் தாக்குகின்றன. பூச்சிகொல்லிகள் கிருமிநாசினிகள் உபயோகப்படுத்துவதனூடாக அவற்றைக் கட்டுப்படுத்தமுடியும். அத்தோடு பங்கசுத் தாக்கமும் ஏற்படக்கூடும். சாதாரணமாக நான்கு பரப்புகளில் ஆயிரம் கொடிகள் வளர்க்கப்படும். அவை சுமார் 3000 கிலோகிராம் பழத்தை அந்தப் போகத்தில் விளைச்சலாக தருமாக இருந்தால் அது சிறந்த விளைச்சலாக பார்க்கப்படும். எனவே அவ்வாறு விளைச்சல் தரக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படும். அதேபோல் குறைவான நிறைகளை உள்ளடக்கியும் விளைச்சலும் கிடைக்கும்.

எனவே, மேற்குறிப்பிட்ட பயிர்களின் விவரங்களின் அடிப்படையில் பூச்சிகொல்லிகள், மருந்துவகைகளுக்கு விலை அதிகமாகக் காணப்படுவதாகவும் அவற்றை அதிக பணம் கொடுத்து விவசாயிகள் வாங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்தவகையில் பயிர்ச்செய்கையை திறன்பட செய்வதில் பாரிய சிக்கல் காணப்படுவதும் தெரியவந்தது. எனவே அவற்றை அரசாங்கமோ அல்லது அவற்றை உற்பத்திசெய்யும் நிறுவனங்களோ அதன் விலைகளில் கவனம் செலுத்தவேண்டும். விவசாயத்தையும் விவசாயிகளையும் புத்துணர்ச்சியளித்திட முன்வரவேண்டும் என்பதே எனது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டணமும் பழங்கஞ்சியும்





லிங்கேஸ்வரன் கருணிகா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

"உதிக்கின்ற சூரியனிலேயே ஊறவைத்த உப்புக் கஞ்சி, உணர்வோடு உள்ளிறங்கையில் உறவாடும் பழங்கஞ்சி" என்ற முதுமொழி கூறி, விவசாயம் செய்து அறுவடையைப் பெற்று, பசிக்கு வயிற்றை நிரப்பிய பழங்கஞ்சி எங்கு போய்விட்டது?

தொழில்நுட்பப் புரட்சி, நவீனத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சி உணவுப்பழக்கங்களில்கூட மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. நாகரிகத்தில் வளர்ச்சிபெற்ற உள்ளங்கள், உடனடி உணவுகளான பீட்சா, பர்கர் போன்றவற்றை நாடிப்போகின்றன.

பட்டண வாழ்க்கையை நோக்கிப் பழங்குடிகளும் நகர, விவசாய நிலங்கள் விளையாமல் போக, பழங்கஞ்சி மரபு எங்கு போய்விட்டது? உழைக்கின்ற வாழ்க்கை, சத்தான உணவுக்கென்று இருந்த காலம் போய், ஓடிக்கொண்டிருக்கும் பயணம் உடனடி உணவோடு என்று மாறிவிட்டது. உறவுகள் கூடி உள்ளங்கள் கலந்து பரிமாறிய பழங்கஞ்சி, இன்று எங்கு போய்விட்டது?

உணவு என்பது வெறுமனே உண்டு வயிற்றை நிரப்பும் விஷயமல்ல. உறவுகளோடு ஒன்றித்து, ஒற்றுமை உணர்வோடு ஆரோக்கியத்தையும் பேணுகின்ற ஒரு விடயமாகும். கஞ்சி என்பது ஈழத்தின் அடையாளமாகும்! இதன் மதிப்பை அடுத்த சந்ததிக்குக் கொண்டுசேர்ப்பது நமது கடமை. பாரம்பரியத்தை அழியாமல் காப்பது மட்டுமின்றி, அதை வழங்குவதும் நமது பொறுப்பாகும்.

## கிராஞ்சி - வேரவில் - வலைப்பாடு வீதிப்பிரச்சினை

# முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அமைந்துள்ள கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பகுதிகள் வருடங்கள் கடந்தும் வீதி வசதி இல்லாமலே தவித்துவருகின்றன. இப்பகுதியை இணைக்கும் முக்கியமான வீதி, பல வருடங்களாக புனரமைக்கப்படாமலே இருப்பதால் மக்கள் தினமும் சிரமங்களைச் சந்திக்கின்றனர். வீதியின் தற்போதைய நிலைமை மோசமாக உள்ளது. வீதி பெரும்பாலும் உடைந்துபோன கிரவல் அல்லது மண் அடுக்குகளால் ஆனது. இது மழைக்காலங்களில் வெள்ளம் பாய்ந்து சேறாக மாறுவதால் வாகனங்களும் பாதசாரிகளும் பயணிக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. தூசி பறக்கும் காலங்களில் தூசிப் பொருள்கள் மூலமாக இருமல், ஆஸ்துமா போன்ற நோய்கள் அதிகரிக்கின்றதுடன் மழைநீர் தேங்கிநிறைவதால் நுளம்புப் பெருக்கம் ஏற்படுகிறது. டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களும் பரவுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.

நிரந்தரமாக சேதமடைந்துள்ள வீதியின் காரணமாக வாகனங்களை இயக்குவது மிகவும் ஆபத்தானதாகவும் சிரமமானதாகவும் மாறியுள்ளது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவும் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லவும் சிரமப்படுகின்றனர். குறிப்பாக மழைக்காலங்களில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாமல் வீடுகளிலேயே இருக்கின்றனர். இதனால் அவர்களது கல்வி தொடர்ந்து பாதிக்கப்படுகிறது.

அவசரகால மருத்துவ சேவைகள், தீயணைப்பு சேவைகள் போன்றவை வீதியின் மோசமான நிலையால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. பல்வேறு சம்பவங்களில் சாலையின் சீரற்றநிலை உயிரிழப்புகளுக்கும் காரணமாக இருந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவை மட்டுமல்லாது பொருளாதார இழப்புகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக விவசாயிகள், மீனவர்கள் போன்றவர்கள் தங்களது உற்பத்திகளை சந்தைகளுக்குக் கொண்டுசெல்லமுடியாமல் பெரும் இழப்புகளைச் சந்திக்கின்றனர். மழைக்காலங்களில் சிலவேளை சாலைகள் முற்றிலும் பயன்பாட்டுக்கு அர்த்தமற்றதாக மாறுகின்றன. இதனால் பொருளாதாரம் பெரும் பாதிப்படைகின்றது. சில நேரங்களில் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் கிடைக்கும் வழிகள் துண்டிக்கப்படுகின்றன. அத்துடன் கிராமங்களுக்கிடையேயான தொடர்புகள் முற்றிலும் குறைந்துவிட்டன. மக்கள் சமூக நிகழ்வுகளில் பங்கேற்க முடியாமல் இருக்கின்றனர்.



இந்த வீதியானது மூன்று கிராமங்களுக்கு மக்கள் செல்லும் மிகவும் பிரதான வீதியாகக் காணப்படுகின்றது. இக் கிராமங்களில் அதிகளவு மாணவர்களை பல்கலைக்கழகங்களிற்கு அனுப்பிவைத்த மூன்று பாடசாலைகள் காணப்படுகின்றன. அத்துடன் ஒரு வைத்தியசாலையும் காணப்படுகின்றது. எனவே இவ்வீதியைப் புனரமைக்கவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. தொடரும் வீதிப் பிரச்சினையால் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதைக் கவனத்திற்கொண்டு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் பிரச்சினைக்கான தீர்வை வழங்கவேண்டும்.



கருணேஸ்வரன் அரவிந்தன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் இன்னியம்' ஒரு பண்பாட்டுப்புரட்சி



■ சி. சிவலஷ்சுமி
*இரண்டாம் வருடம்,*
*ஊடகக்கற்கைகள் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



"கலை பேணி பண்பாட்டின் விழுதாகுவோம்" என்ற மகுட வாசகத்தினைக் கொண்டு தமிழர் பாரம்பரியங்களையும், பண்பாட்டினையும் பேணி வளர்த்துவருவதில் இன்றும் முன்னிற்கும் வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தின் கலைப்பணியின் சிறப்புமிகு அம்சங்களில் ஒன்றாக 'தமிழ் இன்னியம்' காணப்படுகின்றது.

தமிழர்களின் மரபுவழிவந்த வாத்தியங்கள் முழங்க, தமிழ்ப் பாரம்பரிய உடைகள் அணிந்து, பாரம்பரிய நடனமுறைகளைக் கையாண்டு விருந்தினர்களை வரவேற்கும் முறையாக இந்தத் தமிழ் இன்னிய வரவேற்பு முறை காணப்படுகின்றது. இன்னியம் என்பதில் இன்இனிமை என்றும், இயம்-இசை தரும் கருவி, வாத்தியம் என்றும் அழைப்பர். வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தின் தமிழ் இன்னிய ஆரம்பம் என்பது 2014 ஆம் ஆண்டு கலைமன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே தோற்றம்பெற்றுவிட்டது. இதற்கு அடித்தளமாக இருந்தவர் கலைமன்றம் தோற்றம்பெற்ற காலத்தில் தலைவராகச் செயற்பட்ட யாழினி வினோத்குமார் ஆவார். இதற்கு அடிப்படைக் காரணமாக அவர் கூறுவது "நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் சிறப்புப் பாடமாகக் கற்றுக்கொண்டிருந்த காலத்தில், அங்கே பட்டமளிப்பு விழாக்களின்போது பாரம்பரிய தமிழ் இன்னியத்தினை நூல்களைத் துறையினர் ஆற்றுகை செய்து சிறப்பித்திருப்பது வழக்கம். அதனை மையமாகக் கொண்டே எமது கிராமத்து இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் அனைவரையும் கொண்டு இவ்வாற்றுகையை ஆரம்பிக்கவேண்டும் என்ற நோக்கோடு கலைமன்றத்தின் மூலம் அனைவரது ஒத்துழைப்புடனும் ஆரம்பித்தேன்" என்றார். ஆரம்பகாலத்தில் வடலியடைப்பு கிராமம் சார்ந்த விழாக்கள், கலைநிகழ்வுகள் போன்றவற்றிலேயே இவ் இன்னியமானது நிகழ்த்தப்பட்டிருந்ததும், பிற்பட்ட காலத்தில் இதன் வளர்ச்சி பிரதேச செயலகங்கள் சார்ந்த கலைவிழாக்கள், கலாசார விழாக்கள், பிரதேசசபை, திருமறைக்கலாமன்றம் போன்ற கலைமன்றங்களினதும் நிகழ்வுகளின்போது ஆற்றுகை செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இத் தமிழ் இன்னியம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வெவ்வேறு பிரதேசங்களிலும் ஆற்றுகை செய்யப்படுவதும் கலைமன்றத்தின் சிறப்புமிகு வளர்ச்சியில் ஒன்றாகும். "தனியாக எமது பிரதேசத்தில் மட்டுமல்லாது வெளிமாவட்டங்களிலும் குறிப்பாக மருதங்கேணி பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா, மலையகத்தில் ஊடறு பெண்கள் அமைப்பின் மாநாடு, கொழும்பில் பனை அபிவிருத்திச் சங்க கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் இன்னிய ஆற்றுகை என்பது கொண்டுசெல்லப்பட்டு ஆற்றுகை செய்யப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ் இன்னியத்தின்போது டொல்கி, உடுக்கு, தாளம், சுருதிப்பெட்டி, பறை, கொம்பு, சங்கு, மேளம் போன்ற வாத்தியக்கருவிகள் இசைக்கப்படும். இன்னியத்தில் பங்கேற்கும் கலைஞர்களாக இக்கிராமத்தின் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் சிறுவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் அரச உத்தியோகத்தர்களாகவும், அன்றாடத் தொழில் செய்பவர்களாகவும், தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களாகவும், பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களாகவும் காணப்படுகின்றனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இவ் இன்னிய ஆற்றுகையானது கலைநிகழ்வுகள், கட்டடத் திறப்புவிழாக்கள், கண்காட்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் விருந்தினர்களை வரவேற்க அலங்கரித்திருந்துள்ளது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இக் கலைஞர்களின் பங்களிப்பாலும், கலைமன்றத்தின் முயற்சியாலும் இவ் இன்னியமானது சமூகத்தின் பல்வேறு இடங்களிலும் பல்வேறு நிகழ்வுகளையும் அலங்கரித்துவருகின்றது. எதிர்காலத்திலும் அலங்கரித்துவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற இடங்களில் 'தமிழ் இன்னிய' வரவேற்பு முறையானது காணப்படுகின்ற வேளையில், ஒரு கிராமத்தில் கலைமன்றம் என்ற அமைப்பின் கீழ் 'எமது கலைகளை நாமே வெளிக்கொண்டுவரவேண்டும்' என்ற நோக்கோடு இவ் இன்னியம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை சங்கே முழங்கென்று சரித்திரத்தில் இடம்பிடித்து வளர்ச்சிகண்டு வருகிறது. இவ்வாறு தமிழர்களின் பாரம்பரிய கலைகளை ஒரு கிராமத்திலோ நிறுவனங்களிலோ மட்டுமல்லாது அனைத்து இடங்களிலும் பரவச் செய்வது தமிழரின் கடமையாகும். ■

## சினேகிதியே...

நினைவுகளை கொஞ்சம் மீட்டிப் பார்த்திடலாம்
கவிகளோடு..

பேரண்டத்தின் முதல் முத்தத்தை எனக்கு தந்தவளே
உனக்காக நான் சில கவி முத்தத்தை தருகின்றேன்

வையகத்தில் ஆயிரம் உறவுகள் உலாவித் திரிந்தாலும்
என் அகிலமென என்னில் வாழும் என் முதல் சினேகிதியே
உடல் தந்து உயிர் தந்து உணர்வுக்குள் நீ கலந்து
உதிரத்தால் உயிரூட்டி என்னுள்ளே கலந்தவளே


குறும்பெனவே உன் கன்னத்தில் நான் தந்த தழும்புகளை
உன் முத்தத்தின் இதழ்கொண்டு மூடிமறைத்தவளே
கையோடு நான் தவழ்ந்து கால் ஊன்றி நிற்கையிலே
உன் விழி கொண்ட பேரின்பம் கண்ணீராய் கிளம்பியதே

மழலை மொழி விட்டு இங்கு "மா" எனவே நான் அழைக்க
சிதரும் முத்து போலேயிங்கு என்னை தூக்கிக் கொஞ்சியவள்
துள்ளும் வயது வேளையிலே கொஞ்சம் தடுக்கி விழிந்திடவே
நொடியின் வேகம் தகர்ந்திடவே என்னைத் தாங்கிப்பிடித்திடுவாள்

தடுக்கி விழுந்தவள் தாங்கிப்பிடிப்பவளாய் மாறிப்போக
கன்னத்தை கடித்தவள் என்னைக் கட்டியணைத்து முத்தம் தந்திட
என்னை உன் மடியினில் வைத்து தாலாட்டிய கணம் மாறி
உன்னை என் மடியில் வைத்து நான் தாலாட்டிட
எனக்காய் இவ் வையகத்தில் வாழும் என் ஆருயிரே
உனக்காய் இப்பிறவியை நான் சமர்ப்பித்தேன்

எனக்காய் வலி தாங்கி என்னை வலிமையாக்கிய என் தாயே
என் எதிர்காலத்தை உனக்காய் வாழ்ந்திடவே யோசித்தேன்
வாழ்வில் நடந்தவை நடப்பவை இன்னும் இருப்பவையெல்லாமே
நீயின்றி ஓர் அணுவும் அசையாது என உணர்ந்துகொண்டேன்

[illegible]
உன் மீது நான் கொண்ட காதல் என்றும் அழியாதம்மா



கலைவாணன் துஷிந்தன்
கிழக்குப் பல்கலைகழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## இறைச்சிக்கடைகள், பொதுச்சந்தை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்
## (12.06.2025 - 31.12.2025)

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகள், பொதுச்சந்தை 2025ஆம் ஆண்டிற்கு (12.06.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்காக சபையினால் மீள் கேள்வி கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : 04.06.2025 – 11.06.2025 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : 11.06.2025 பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : 11.06.2025 புதன்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர் |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 11.06.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| புத்தூர் உப அலுவலகம் (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | | | | | |
| 1 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 20,000.00 | 766,840.00 |
| 2 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | 20,800.00 |
| 3 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 80,000.00 | 2,117,365.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | | | |
| 4 | கோப்பாய் கோழிஇறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | 92,385.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26, 2024.11.23 ஆம் திகதிகளில் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**
2025.06.04

(CR/45272) J-1

## சிறையுடைத்துத் தப்பியோட்டம்

பாகிஸ்தானின் கராச்சியில் நேற்று இடம்பெற்ற நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, கராச்சி மத்திய சிறைச்சாலை உடைக்கப்பட்டு 200க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியுள்ளனர். (ம)

## பராமரிப்பாளர் தேவை

இணுவில் பகுதியில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 655 1739**

## வேலையாட்கள் தேவை

- மேசன் - Rs 3000.00
- வயரிங் - Rs 3000.00
- வெல்டர் - Rs 3000.00
- பெயின்ரர் - Rs 3000.00
- பிளமிங் - Rs 3000.00
- மேசன் உதவியாளர் - Rs 2500.00
- தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00

தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு :- **077 724 5399**
(காலை 8.30 - மாலை 5.00 வரை) யாழ்ப்பாணம்.

(CS/58204) J-1

## கண்ணீர் அஞ்சலி




பிறப்பு: 26.01.1942
இறப்பு 02.06.2025

எமது அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு ந.சுதர்சன்
அவர்களின் அன்புத் தாயார்
**மகேஸ்வரி நடராஜா**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
பளை - கிளிநொச்சி

(CR/43271) J-1

## மரண அறிவித்தல்



### பிரபாகரன் அக்ஷை

கரவெட்டி, தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் 60 ஆண்டுகள் ஆலய குருக்களாக விளங்கி சிவகதி எய்திய சிவஸ்ரீ. சச்சிதானந்தக் குருக்கள்-பாகீரதி அம்மாள் தம்பதியினரதும், மாவையாதீனம் சு. துரைசாமி குருக்கள், பச்சைநாயகி அம்மாள் தம்பதியினரினதும் பேரனும், அண்மையில் சிவபதம் எய்திய ச.பிரபாகரன் (கலாசார சிரேஷ்ட அதிகாரி, இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்), கலாநிதி. சீதாலக்ஷ்மி (சேர். பொன். இராமநாதன் காண்பிய மற்றும் கட்புல கலைகள் பீடத்தின் நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்) இன் சீமந்த புத்திரனும், அபிஷேக் (IIT,Business Management) இன் பாசமிகு அண்ணனுமான பிரபாகரன் அக்ஷை (2017 A/L - St. John's College, General Sir John Kotelawala Defence University - Aircraft Maintenance Engineering - Final Year) கடந்த 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை முன்னிரவு 7.30 மணிக்கு சிவபதம் எய்தினார்.

அன்னார் சச்சிதானந்தக்குருக்கள் திவாகரன் - கஜலக்ஷ்மி தம்பதிகளினதும், விநோத்குமார் - இந்துமதி தம்பதிகளினதும் அருமைப் பெறாமகனும், சுவாமிநாத ஐயர், ஜெகதீஷ்வர ஐயர், இரத்தினகைலாசநாத சர்மா, இராதாகிருஷ்ண ஐயர் ஆகியோரின் மருமகனும், பரத், ஸ்நேஹா, நிதேஷின் அன்பு சகோதரனும், ஸ்ரீவித்தியாவின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (03.06.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7/9A,
**பண்டாரக்குளம் மேற்கு வீதி,**
**நல்லூர்**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**078 568 8366**
**076 607 7333**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - நீர்வேலி
## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வட்டாரம் - 08, யாழ்ப்பாண வீதி ஆதன இல - 292

யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வேலி, உப அலுவலகத்திற் குட்பட்ட வட்டாரம் - 08, யாழ்ப்பாண வீதி, ஆதன இல : 292 ஆனது அதன் சொந்தக்காரராக V. சண்முகம் உ.கோ: தர்மலிங்கம் கைம்பெண் பொன்னம்மா என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தினை தர்மசேகரம் துஸ்யந்தன் என்பவர் நொத்தாரிசு திரு செ.நா.சத்தியநாதன் என்பவரால் 841ஆம் இலக்க 2024.04.03 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம், திரு. கந்தையா தர்மலிங்கம் என்பவருக்கு சொந்தமாக இருந்து அவருக்கு பின் அவரின் மகன் திரு.தர்மலிங்கம் தர்மசேகரத்துக்கு சொந்தமாக ஆனதுடன். குறித்த ஆதனத்திற்கான உறுதி ஆவணம் 1995 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக தவறிப்போயுள்ளதுடன் இவ் உறுதி தொடர்பாக தேடுதல் செய்வதற்கு குறித்த உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசு தொடர்பாகவோ எழுதப்பட்ட ஆண்டு தொடர்பாகவோ சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை எனவும் இவ் ஆதனம் தந்தை வழியாக எனக்கு முதுசமாக வந்த ஆதனம் எனவும் வெளிப்படுத்தி தர்மசேகரம் துஷ்யந்தன் என்பவருக்கு வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த ஆவணம் தொடர்பாக 2012.08.11 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகதாவில் 13471 ஆம் இலக்கத்தில் குத்தகை உறுதி ஒன்று தர்மசேகரம் துஷ்யந்தனின் தாயாரான தர்மசேகரம் கைம்பெண் ஜெயராணியால் முற்பதிவு, முன்னுறுதிகள் எவையும் காட்டப்படாமல் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் K617/101 இல் பதியப்பட்டுமுள்ளது.

ஆதன இடாப்பு ;
வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, நீர்வேலி இறை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட J/268 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த "பதியவளவும் வேளையாவத்தையும் " நில.பர. 7 குளி 12.7 இது 2023.04.26 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா தயாரித்த 5313 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டி விபரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஏழு குளி பன்னிரண்டு தசம் ஏழுக்கும் எல்லைகள் :-

கிழக்கு : பருத்தித்துறை வீதி
வடக்கு : பொன்னம்பலம் சிவனேசனின் ஆதனம்
மேற்கு : தயாளினி நாகநாதனின் ஆதனம்
தெற்கு : சோதிலிங்கத்தின் ஆதனம், இடதங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது இவ் ஆதனத்தினை தர்மசேகரம் துஷ்யந்தன் என்பவர் ஆதனப் பதிவேட்டில் தனது பெயரிற்கு மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தர முடியும் அத்துடன் ஆட்சேபனைகள் எவையும் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது யாரேனும் உரிமை கோராதவிடத்து, குறித்த ஆதனமானது "தர்மசேகரம் துஷ்யந்தன்" என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**

(CS/58463) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இரண்டரையடி...

அரியாலை - சிந்துபாத்தி இந்து மயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தற்போது அகழ்வுப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. நேற்றைய நாள் அகழ்வின்போதே, இரண்டரையடி நீளமான என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை குழந்தைகளுடையவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அத்துடன், இதுவரை அடையாளம் காணப்பட்ட இரண்டு என்புத்தொகுதிகள் நேற்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நீதவான் ஆ.ஆனந்தராஜா அகழ்வுப்பணிகளைக் கண்காணித்து வருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப்பணிகளின்போது முன்னிலையாகிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## போரில்...

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன்ஸ், உதயன் பணிமனைக்கு அண்மையில் வருகை தந்திருந்தார். ஆசிரியபீடத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, 'கனடாவின் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டதைப் போன்று, புலம்பெயர் தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியாவிலும் இனவழிப்புக்கான நினைவுத்தூபி அமைக்கக் கோரிக்கை விடுத்தால் அனுமதி வழங்கப்படுமா?' என்று ஊடகவியலாளர்கள் வினவினர். இதன்போதே தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துரதிர்ஷ்டவசமாக, இந்தக் கேள்விக்கு நான் அதிகம் எதுவும் சொல்லமுடியாது, ஏனெனில் நான் ஓர் அரச அதிகாரி. எனவே, அவுஸ்திரேலிய நாடாளுமன்றதின் சார்பில் பேச எனக்கு அதிகாரம் இல்லை. இது அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் தீர்மானிக்கவேண்டிய ஒரு விடயம்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்திற்கு இதுபோன்ற ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டால், அவுஸ்திரேலிய அரசு அதை வெறுமனே ஏற்றுக்கொள்ளுமா? மோதலின்போது உயிரிழந்த பொது மக்களின் நினைவாக அவுஸ்திரேலியாவில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்படுமா? இந்த வகையான கோரிக்கை அவுஸ்திரேலிய அரசால் சாதகமாக ஏற்றுக்கொள்ளப்படுமா? என்பதையெல்லாம் நான் சொல்ல முடியாது.

அவுஸ்திரேலியாவில் நாம் ஒரு வெற்றிகரமான பன்முகக்கலாசார ஜனநாயகத்தைக் கொண்டுள்ளோம். 300 இற்கும் மேற்பட்ட இனப் பின்னணியைச் சேர்ந்த மக்கள் எமது நாட்டில் வாழ்கின்றனர். அவுஸ்திரேலியாவில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் இலங்கையர்கள் உள்ளனர். இவர்களில் தமிழர்கள் மட்டுமல்லாது சிங்கள, முஸ்லிம் மக்களும் இருக்கின்றனர்.

இலங்கையின் உள்நாட்டுப்போரின் விளைவுகளையும், அது இங்குள்ள சமூகங்கள் மீது ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தையும் நாங்கள் அறிவோம். போரில் கொல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் மற்றும் நண்பர்களை நினைவுகூரவேண்டியதன் அவசியத்தையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம். அதேவேளை, அவுஸ்திரேலியாவில் நிலவும் சமூக ஒற்றுமையைப் பாதுகாப்பதிலும் நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறோம் - என்றார். (அ-ம-எ-ச)

## வெளிநாடுகளில்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, 'குற்றவாளிகள் பரிமாற்றம் தொடர்பில் லத்வியா நாட்டுடன் உடன்படிக்கை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. சிங்கப்பூருடன் இவ்வாறான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படமாட்டாதா?' என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைக்கைதிகள் பரிமாற்றம் தொடர்பில் பொதுவான சட்டம் இருந்தாலும் அதனை அமுலாக்கும்போது சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவேண்டும். எதிர்காலத்தில் நீங்கள் கூறும் நாடுகளுடன் (சிங்கப்பூர்) ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு, அங்குள்ள ஊழல் மோசடியாளர்கள் (அர்ஜுன் மகேந்திரன்) நாட்டுக்கு அழைத்துவரப்படுவார்கள்.

எந்தவொரு குற்றவாளியையும் தப்ப விடுவதற்காக நாம் ஆட்சிக்கு வரவில்லை. எனவே எமக்கு குழப்பமடைய வேண்டிய அவசியமில்லை. மக்களின் பணத்தைக் கொள்ளையிட்ட எவராக இருந்தாலும் அவர்களைக் கைதுசெய்தே தீருவோம் - என்றார். (அ-ம-44)

## கிளிநொச்சியில்...

உடைமையில் வைத்திருந்த தாயும் மகனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய சந்தேக நபர்களின் வீட்டைச் சோதனையிட்ட போது, அங்கிருந்த கைவிடப்பட்ட ரயர் ஒன்றுக்குள் குடு போதைப்பொருள் மறைத்துவைக்கப்பட்டிருந்துள்ளது. இதையடுத்து போதைப்பொ... ...பொருளை உடமையில் ...வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டிலிருந்த தாயும், மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரையும் நாளையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-113)

## மனைவி...

தனது மனைவியைக் வெட்டிக்கொலை செய்துவிட்டு, அவருடைய தலையுடன் கணவன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இந்தச் சம்பவத்தால் வவுனியாவில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வவுனியா நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஆசிரியையான சுகிர்தரன் சுவர்ணலதா (வயது-32) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். அவர் ஒரு கர்ப்பிணிப் பெண் என்றும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நீண்டகாலமாக குடும்பத் தகராறு இருந்துள்ளது. அவர்கள் இருவரும் மோட்டார்சைக்கிளில் புளியங்குளம் நோக்கி நேற்றுச் சென்றபோதே, சின்னப்பூவரசம் குளத்துக்கு அண்மித்த காட்டுப்பகுதியில் குறித்த கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மனைவியைக் கொலைசெய்த பின்னர், அவருடைய தலையை வெட்டி பொலுத்தீன் பையில் எடுத்துக் கொண்டு கணவன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். மனைவியைக் கொலைசெய்த விடயத்தையும், சடலத்தைக் காட்டுப்பகுதியில் வீசியுள்ளமையையும் அந்த நபர் பொலிஸாரிடம் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், சின்னப்பூவரசம் குளத்துக்கு அண்மித்த காட்டுப்பகுதியில் வைத்து தலையற்ற நிலையில் காணப்பட்ட உடலை மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110-28)

## முல்லையில்...

சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 17 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். கடந்த முதலாம் திகதி ஒரேநாளில் நால்வர் நீரில் மூழ்கி உயிரிழந்தமையால் முல்லைத்தீவு மாவட்டமே சோகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூவர் பாடசாலை மாணவர்களாவர். பாடசாலைகளில் நீச்சல் பயிற்சியைக் கட்டாயமாக்குவதன் மூலம் இவ்வாறான அசம்பாவிதங்களை நாங்கள் தவிர்க்கலாம். இதையொரு தேசியப் பிரச்சினையாகக் கருதி இந்த விடயத்தைக் கருத்திலெடுக்குமாறு கோருகின்றேன் - என்றார். (அ-ம-26)

## குற்றவாளிகளுடைய...

மாக நிராகரிக்கப்பட்டுள்ளது. முதல் குற்றவாளி சோமரட்ண ...ராஜபக்ச உட்பட ...தண்டனை வழங்கப்பட்டுள்ள ஐவர் தாங்கள் பல வருடங்களாக மரணதண்டனைக் கைதிகளாக உள்ளதாகத் தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தனர். தங்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும், அல்லது தண்டனையை ஆயுட் தண்டனையாக மாற்றவேண்டும் என அவர்கள் தங்களின் மனுவில் கோரியிருந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டிசில்வா இந்த அடிப்படை உரிமைமீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல், மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கடும் ஆட்சேபனைகளை முன்வைத்தார். 'பொதுமன்னிப்பு வழங்குவது என்பது முற்றுமுழுதாக ஜனாதிபதியின் விருப்பமே. எந்தவொரு குற்றவாளியும் அதனை சட்டபூர்வ உரிமையாகக் கருத முடியாது' என அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், மனுதாரர்கள் மீது எந்த நல்லெண்ணமும் ஏற்படவில்லை என்பதும் அவருடைய கருத்தாக அமைந்தது. சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரலின் ஆட்சேபனையை முழுவதுமாக ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், குற்றவாளிகளின் மனுவை நிராகரித்ததுடன், அவர்கள் மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பையும் இரத்துச்செய்தனர். (அ-ம-44)

## போதை...

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே, மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக ஏராளமான போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## ஆலயங்களில்...

நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## சிந்துபாத்தி...

இடம்பெற்றுவரும் பகுதியை, மனிதப் புதைகுழியாக அறிவிக்குமாறு கோரி காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் சார்பில் விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்ததாவது:-

சித்துபாத்தியின் குற்றப் பிரதேசத்தை மனிதப் புதைகுழியாக பிரகடனப்படுத்துமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சார்பில் விண்ணப்பமொன்றைத் தாக்கல் செய்துள்ளோம்.

குறித்த விடயம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அபிப்பிராயத்தையும், யாழ்ப்பாணப் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பிலும் அறிக்கையைத் தருமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார். இது தொடர்பான கட்டளை எதிர்வரும் 6ஆம் திகதி வழங்கப்படவுள்ளது - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்கள் தேவை

யாழ்பாணத்தில் இயங்கும் construction company ஒன்றிற்கு கீழ்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

1. மேற்பார்வையாளர் (Aite supervisor)
2. மேசன் (Mason)
3. மேசன் உதவியாளர் (Labors)
4. தச்சு வேலையாளர்கள் (Carpenters)
5. Painters

அனுபவம் வாய்ந்தவர்கள் அழைக்கவும் சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
யாழ் மாவட்டத்தில் எங்கும் வேலை செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும்.

076 738 0619, 077 258 6022

# சோளம் இறக்குமதி; அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 4
திரிபோஷ உற்பத்திக்குத் தேவையான தரப்படுத்தப்பட்ட 18ஆயிரம் மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உள்நாட்டில் தேவையான தரப்படுத்தப்பட்ட சோளத்தைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் அசௌகரியங்களை கவனத்திற்கொண்டு, இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவிலை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:- 077 892 8094

(CS/58460) J-1

# கும்பாபிஷேகம்

பளை நரசிங்க வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பகல் 12 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை பகல் 12 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நடைபெறும். 9 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மண்டலாபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

## SMART SCIENCE ACADEMY
## A/L CHEMISTRY

LT.T. நாகரத்தினம் BSc (Cey) ஆசிரியர் ஞாபகார்த்த மாதாந்த தொடர் பரீட்சை இரசாயன அலை - 1 இல் தோற்றிய 142 மாணவர்களில் முதல் 10 மாணவர்களின் பெறுபேறுகள் (2027 - Batch)

1. S.MITHUSAAN - 98 J/H/C
2. A.AKSAYA - 98 J/VGHS
3. N.MITHUSA - 92 J/H.L.C
4. B.RAMANAN - 91 J/K.H.C
5. S.SUTHAN - 87 J/K.H.C
6. A.ABEESHETH - 86 St.Patric's
7. T.NARTHANA - 82 J/VGHS
8. E.MERYSTELLA - 81 J/H.F.C
9. S.THARSAN - 83 J.K.C.C
10. K.SANKAVI - 80 J/H.L.C

இரசாயனவியல் ஆசிரியர் (இரசாயன நூல் எழுத்தாளர்)
திரு.S.சுரேஸ்குமார் BSc (Hons) PGDE (Merit)

★ பிரபல தேசிய பாடசாலை ஆசிரியர்.
★ இறுதி வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிக்குச் செல்லும் ஆசிரியர்.

154A, Navalar Road, Brown Road Junction, Jaffna.
077 555 9028, 077 351 3734

(CS/30159) J-1

## வீடு வாடகைக்கு தேவை

கச்சேரி, அரியாலை, திருநெல்வேலி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை

தொடர்புகளுக்கு:
077 291 9079

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள்
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

தொடர்பு: 077 386 6250

## வரவேற்பாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நகைக்கடை ஒன்றிற்கு வரவேற்பாளர் தேவை.

- வடமாகாணத்தைச் சேர்ந்த ஆண்கள் தொடர்புகொள்ளலாம்.
- வயதெல்லை கிடையாது.

தொடர்பு:- 076 658 0661

# மரண அறிவித்தல்



## சாமியாபிள்ளை கமலாம்பிகை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.03.1936 | 01.06.2025 |

நயினாதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் யாழ் கொக்குவில் சம்பியன் வீதி 3ம் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சாமியாபிள்ளை கமலாம்பிகை அவர்கள் கடந்த (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சாமியாபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சிவராசா, தருமராசா, ஜெயலீலா, நேசராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், வீரவாகு, அருள்பிரகாசம், வள்ளிப்பிள்ளை, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசேகரம், தியாகராஜா, தாமோதரம்பிள்ளை, மயில்வாகனம், கணபதிப்பிள்ளை, தருமலிங்கம், கனகசபை, மற்றும் கோபாலபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற தவமலர் மற்றும் ஓங்காரநாதன், கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சாளினி, சாரங்கன், சாமியா, அனோஜா, வேனுகா, வினோ, ராஜீ, கண்ணா, கரன், விது, சுஜி, சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்னா, சயான், அதியா, மித்திரன், மயிலன், கீஷா, அகிரான், அஜிஸ், இசையா, கிருஸ்ணி, வாசினி, வர்சிகன், சயன், விகாசினி, வினிஷ், விகான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

47, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 798 9126

(CS/58462) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.